திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொல்வதைப்போல நாங்கள் வெளிநடப்பு பண்ண வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை, நாங்கள் அப்படிக் கருதவில்லை. இந்த விஷயத்தின்மீது. அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களை வருவாய்த் துறையிடம் ஒப்படைக்கக் கூடாது என்பதுதான் எங்களுடைய நிலைப்பாடு. இன்றைக்கு மானியக் கோரிக்கை வருகிற காரணத்தினாலே, அதன்மீது ஒரு நல்ல பதிலுரையை நாங்கள் இடதுசாரிக் கட்சிகள் எதிர்பார்க்கிறோம். அதற்குரிய வகையிலே, எங்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு அரசு அறிவிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சிவபுண்ணியம் அவர்கள் நீண்ட காலம் இந்த அவையிலே இருந்து எல்லா வகையிலும் இந்த அவை எப்படி நடைபெறுகிறது என்பதை அறிந்தவர்கள். ஆகவே, மானியக் கோரிக்கையிலே அவர்கள் பேசிவிட்டுத்தான் விடை கேட்க வேண்டுமே தவிர, மானியக் கோரிக்கையிலே பேசாமல், முன்கூட்டியே விடை கேட்பது என்பது முறையுமல்ல, அதை அனுமதிக்கத் தேவையும் இல்லை. (குறுக்கீடுகள்)

(உ) சிவகங்கை தொகுதி, ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்றத்திற்கு அடிக்கல் நாட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன், என்ன? (குறுக்கீடு) உட்காருங்கள். திரும்பத் திரும்ப எழுந்து நின்று சொல்லிக்கொண்டிருக்காதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டு சட்டத் துறை மானியக் கோரிக்கையில் பேசுகிறபொழுதும், அதற்கு முன்பும் தனிக் கேள்வியாகவும், சிவகங்கை தொகுதி மக்களின் நீண்ட காலக் கோரிக்கையாக ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்றக் கட்டடம் வேண்டுமென்ற கோரிக்கையை

2008 ஏப்ரல் 25] [திரு. சு. குணசேகரன்]

விடுத்திருந்தேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களும் அதனை ஏற்று, 12 கோடி ரூபாய்க்கு ஒருங்கிணைந்த மாவட்ட நீதிமன்றம் கட்டுவதற்கு அனுமதி வழங்கினார்கள். அந்தப் பணி, நாளை 26-4-2008 ஆம் தேதி அடிக்கல்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. குணசேகரன், மானியக் கோரிக்கைக்குப் போக வேண்டும். எல்லாம் முடிந்து போய்விட்டது, உட்காருங்கள்.

5. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

(ஆ) கோரிக்கை எண் 47–இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை)

———

(அ) கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008-2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 32–தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை பற்றிய 32 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.404,73,03,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.3,32,91,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.